250 கோடி ரூபாய்க்கும் மேலாகத் தந்துள்ளார்கள். திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வானூர் பகுதியில் 56 கோடி ரூபாய்க்கு குடிநீர்த் திட்டங்கள் கொடுத்துள்ளார்கள். இவ்வாறு, ஏற்கெனவே பல்வேறு திட்டங்களைத் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தொகுதிவாரியாக, தமிழ்நாடு முழுவதிலும் இருக்கின்ற ஒவ்வொரு தொகுதிக்கும் பலவகையான திட்டங்கள், விலையில்லா திட்டங்கள் தந்ததன் விளைவாக, நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், 39 இடங்களுக்கு, 37 இடங்களில் வெற்றி பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) இனி தமிழகத்தில் எதிர்க் கட்சிகளுக்கு வேலையே இல்லை என்கின்ற அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அகில இந்திய அளவில் மூன்றாவது மிகப் பெரிய கட்சியாக உயர்த்திக் காட்டிய (மேசையைத் தட்டும் ஒலி) எங்களது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த, மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 113, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

113—

சொந்தக் கட்டடம்

***7305—திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, மங்கலம் ஊராட்சியிலுள்ள ஊரகக் கால்நடை மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விருதுநகர் தொகுதி, மங்கலம் ஊராட்சியிலுள்ள துணை கால்நடை மருத்துவமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டுமென்று கேள்வி கேட்டிருந்தார்கள். அந்தக் கேள்வி இந்த அவைக்கு

வருவதற்கு முன்பே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், அங்கே கட்டடம் கட்டுவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் அக்கட்டடம் விரைவில் திறக்கப்படவுள்ளது என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

முற்பகல் 10—55

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெண்மைப் புரட்சி, பசுமைப் புரட்சி ஆகியவற்றுக்கு ஆதார சக்தியான கால்நடைப் புரட்சியினை தமிழகத்தில் நிகழ்த்திவரும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 'வணங்கும் கரங்கள் விலகும் முன்னே, வரம் தரும் தெய்வம் போல' விளங்குகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

விருதுநகர் தொகுதி, மங்கலம் ஊராட்சியிலுள்ள ஊரகக் கால்நடை மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட என் கேள்வி சபையில் எழும் முன்னே, ரூ.11.59 இலட்சத்திற்கு ESVHD திட்டத்தின்கீழ் கட்டடம் கட்டித் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேநேரத்தில் எந்த நகர சபைக்கும் தராமல் நூறாண்டுகாணும் விருதுநகர் நகர சபைக்கு ரூ.25 கோடியை சிறப்பு நிதியாக வழங்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 58 ஊராட்சிகளுடன், 10,210 கால்நடை அலகுகள்— Veterinary Units கொண்ட விருதுநகர் ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள 3 கால்நடை மருந்தகங்கள் போதுமானதாக இல்லை. ஆகவே, ஆமத்தூரில் உள்ள கால்நடைக் கிளை நிலையத்தினை முழுநேர மருந்தகமாகத் தரமுயர்த்தி, அதற்குச் சொந்தக் கட்டடத்தை அருள்கூர்ந்து அரசு கட்டித் தர முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாக வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 114, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

114—

சுற்றுலாத் தலம்

***24730—திரு. ச. பழனிச்சாமி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, மாரம்பாடி ஊராட்சியிலுள்ள புனித அந்தோணியார் திருத்தலப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, மாரம்பாடியிலுள்ள புனித அந்தோணியார் திருத்தலம், திண்டுக்கல் நகரிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இத்திருத்தலத்தில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் செய்வதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.*